


பி. பெருமாள்





# ஆர்ட் போஸ்ட்

இன்றைய மூத்த ஓவியர் பி.பெருமாள் மிகச் சாதாரணமான ஒரு விவசாயியின் மகன். காமராஜர் மாவட்டத்து உள்கிராமமான ராமசாமிபுரத்தில் பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்க வேண்டியதில்லை என்று தந்தையால் தடுக்கப்பட்டவர். 1935-ல் பிறந்த அந்தச் சிறுவனுக்குள் ஓர் ஓவியக் கலைஞன் உயிர்த்துடிப்புடன் இருந்தான். மஞ்சள் அரளிப் பூவிலிருந்து மஞ்சள் வண்ணத்தையும், செம்பருத்தியிலிருந்து சிவப்பையும், செம்மண்ணிலிருந்து பழுப்பையும், அடுப்புக் கரியிலிருந்து கறுப்பு வண்ணத்தையும் எடுத்துப் பயன்படுத்தி சுண்ணாம்பு அடிக்கப்பட்ட தன் வீட்டுச் சுவரில் ஓவியங்கள் தீட்டினான். ராமாயண, மகாபாரத காட்சிகள் விரிந்தன. இதற்குப் பரிசாக அவன் பெற்றவை – சுவரை அழுக்குப் படுத்தினான் என்ற கெட்ட பெயரும், தலையில் குட்டுக்களும்தான். அவனது ஒரே துணை அவனது தந்தை. அவர், சிறுவனது ஓவியத் திறனில் பெருமை கொண்டார்.

அப்போது சென்னையிலிருந்து கிராமத்துக்கு வந்த ஜி.ஏ. அப்பன் எனும் சமூக சேவகர் ஒருவர் சுவர் ஓவியங்களைப் பார்த்தார். பெருமாளின் தந்தையிடம் பேசி அவரைச் சென்னை ஓவியக் கல்லூரியில் கொண்டு வந்து சேர்த்தார். இப்படித்தான் உள்கிராமம் ஒன்றின் மண்ணின் மைந்தன் ஒருவன் தமிழகத்தின் முக்கிய ஓவியர்களில் ஒருவராக மலர நேர்ந்தது.

சென்னை ஓவியக் கல்லூரியின் அன்றைய முதல்வர் தனபாலின் அன்பான அரவணைப்பும், கே.சி.எஸ். பணிக்கரின் நவீன கலை குறித்த விழிப்பு உணர்வும் பி.பெருமாளை உன்னதமான ஓர் ஓவியராக மலர்த்தியது.

இன்றைய பெருமாளின் வண்ண ஓவியங்களில் அகம்பாவம் அற்ற எளிமையின் சிக்கனம் உண்டு. நாகரிகப்படுத்தப்படாத ஒரு மூலசக்தியை இவரது ஓவியங்களில் காணலாம். நவீனத்துவம் என்ற பெயரில் தமிழனுக்குள் இருக்கும் ஒரு ஆதிஉக்கிரத்தைப் பெருமாள் என்றைக்கும் இழந்ததில்லை. இன்றைக்கு ஒரு பி.ஏ. பட்டதாரியாக, ஓவியக் கலையை நன்கு பயின்றவராக, ஓவியக் கல்லூரியின் பேராசிரியராகத் திகழும் பாண்ட், ஷர்ட் அணிந்த பெருமாளின் பேச்சும், பாவனைகளும் பட்டிக்காட்டுத்தனமான உண்மை மணத்தோடு திகழ்வதைக் காணலாம்.

வண்ணங்களைச் சுத்தமாகப் பூசி முடிப்பதில்லை பெருமாள். மாறாக, தனது உணர்ச்சிக் கொதிநிலைக்கு ஏற்ப வண்ணங்களை எடுத்துப் பூசுகிறார். நீலம், ஆரஞ்சு, வெண்மை, கறுப்பு, பழுப்பு என்று அடிப்படை வண்ணங்களை ஒன்றின் பக்கத்தில் மற்றொன்றாக வேகமாகப் பூசுவதன் மூலமாகத் தமது ஓவியங்களில் ஒரு பளிச்சிடும் தன்மையைக் கொண்டு வருகிறார்.

பெருமாள், பொருள்களின் முப்பரிமாணத் தன்மை குறித்து அக்கறை எடுத்துக் கொள்வது இல்லை. இயல்பாக மனிதர்கள் எப்படி இருப்பார்களோ அப்படியே பிரதி எடுத்ததுபோல அவர்களைச் சித்திரிப்பதில்லை. வேண்டுமென்றே மனித உருவங்களை இயற்கைக்கு எதிரான முறையில் உயரமும், ஒரே அளவு இல்லாத நீண்ட கை, கால்களும் கொண்டவர்களாகப் படைக்கிறார். கலையில் சரியான அறிமுகம் இல்லாதவர்கள் இவரது ஓவியங்கள் சிறுபிள்ளைத்தனமாக இருப்பதாகக் கூற நேரலாம். பல நேரங்களில் உணர்ச்சியைப் பகிர்ந்துகொள்வதுதான் கலையின் முக்கிய நோக்கம் என்பது அழகாயிருப்பது என்பதுடன் குழப்பிக் கொள்ளப்படுகிறது.

பி.பெருமாளின் ஓவியங்கள் பெரும்பாலும் கிராமத்துக் கதாபாத்திரங்களைச் சுற்றிச் சுழல்கின்றன. பட்டிக்காடுகள் என்று உதாசீனப்படுத்தப்படுகிற கிராமத்து மக்கள் – சூரியனில் கறுத்த பழுப்பு, கரும்பச்சை நிற உடம்புகளுடன் இவரது தூரிகைத் தீண்டலில் உன்னத இடம்பெறுகிறார்கள். ஒராடை மட்டும் அணிந்த ஆண்களும், ரவிக்கைகூட இல்லாமல் வெற்றுடம்பில் புடவை அணிந்த பெண்களுமாய்க் காணப்படுகிறார்கள்.

இவரது ஓவியங்கள் நவீன ஓவியத்தின் முக்கிய போக்காக இருந்த ஃபாவிஸ கலைக்கூறுகளைக் கொண்டவை. 1905-ல் பிரெஞ்சு நாட்டிலிருந்து ஓர் ஓவியக் கூட்டம் தட்டையான, பிரகாசமான வண்ணங்களை வன்மையான முறையில் கையாண்டு தங்கள் ஓவியங்களைப் படைத்தது. மத்தீஸ், காகின் போன்ற உலகப் புகழ்பெற்ற ஓவிய மேதைகளைக் கொண்ட இந்த ஓவியக் குழுவினர், தங்களை ஃபாவிஸ்டுகள் (Fauvists) என்று அழைத்துக் கொண்டனர். சம்பிரதாயமாக ஓவிய உலகில் கடைப்பிடிக்கப்பட்ட வரைகலை, முப்பரிமாணத் தன்மை, இயற்கையின் வெளிச்சத்தை அப்படியே ஓவியத்தில் பின்பற்றுதல் போன்றவற்றை இவர்கள் நிராகரித்தனர். தங்களை 'காட்டு விலங்குகள்' என்று அழைத்துக் கொண்டனர். இதன் பொருள் – நாகரிகமற்றுப் போனார்கள் என்பது அல்ல. நாகரிகத்தின் பெயரால் உண்மையான கலை உணர்ச்சிகள் முனைமழுங்கிப் போகக்கூடாது என்பதற்காகவே இவர்கள் தங்கள் ஓவியங்களை வேறுவிதமாகப் படைத்தார்கள்.

பி. பெருமாளின் ஓவியங்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் உருவங்கள் தீர்க்கமான கோடுகளால் வரையறுக்கப்பட்டிருப்பதில்லை. முகங்களில் கண், காது, மூக்கு போன்றவை குறித்த விவரணைகள் ஏதும் இருக்காது. இதுபற்றி மிக முக்கிய ஃபாவிஸ ஓவியரான மத்தீஸ் குறிப்பிடுகிறார்: "மேலோட்டமான விவரணைகள், பார்வையாளன் மனதில் மிக முக்கியமான விவரணைகளாக மாறி இடையூறு செய்து ஓவியத்தின் மொத்த தொனியையே அவன் புரிந்து கொள்ளாமல் செய்துவிடும் அபாயம் கொண்டவை.

இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்காகவே ஓவியங்களின் உள்விவரணைகளைத் தவிர்த்து விடுகிறார் பெருமாள்.

உதாரணமாக இவரது 'புலி வேஷம்' எனும் ஓவியத்தை எடுத்துக் கொண்டால் அதில் சுமார் 20 உருவங்கள் இடம்பெறுகின்றன. ஒன்றுக்காவது முகத்தில் விவரணைகள் கிடையாது. எனவே, முக அபிநயங்கள் மூலமாக உணர்ச்சிகளைத் தெரிவிக்க முடியாது. எல்லா உணர்ச்சிகளையும் உருவங்களின் உடல்சார்ந்த ஒரு மொழி மூலமாகவே தெரிவிக்க வேண்டும். எகிறிக் குதித்துப் பறை அறைகிறான் ஒருவன். மூச்சுப் பிடித்து துளைக் கருவி இசைக்கிறான் இன்னொருவன். பலர் குனிந்தும், கை கால்களை உயர்த்தியும் நடனம் ஆடுகின்றனர். பார்வையாளர்கள் பலவித நிலைகளில் நின்று உன்னிப்பாகக் கவனிக்கின்றனர். இவர்களுக்கு நடுவில் புலி வேஷக்காரன் இயல்புக்கு மீறிய உயரத்துடன் நிற்கிறான். வானமும், பூமியும் ஒரே நிறம். வண்ணப்பூச்சின் வேகத்தின் மூலமாகவே ஓவியத்துக்குள் ஓர் இயக்கத்தை உருவாக்கி விடுகிறார் ஓவியர். இந்த ஓவியத்துடன் 1909-ல் மத்தீஸ் தீட்டிய 'நடனம்' எனும் ஓவியத்தை ஒப்புநோக்குவது மிகவும் தேவை.

மொத்தத்தில், வண்ணங்களைக் கையாள்வதில் பி. பெருமாள் பேராசை பிடித்தவர் மட்டுமல்ல... பேராற்றல் கொண்டவரும்கூட. பெருமாளின் ஓவியங்களைப் பார்த்தால் ஒன்றை முக்கியமாகப் புரிந்து கொள்ளலாம். உள்மனதின் நிறைகளும், உருவங்களும், நிகழ்ச்சிகளும் அவ்வவற்றுக்கான வண்ணங்களுடனேயே பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால்தான் பெருமாளின் பூமி நீலமாயிருக்கையில், வானம் பழுப்பு நிறத்தில் இருக்க நேர்கிறது. ஓவியனின் அந்தரங்கமான பார்வை ஓவியத்தில் பதிவாகிறது.

பி.பெருமாளின் ஓவியங்களில், வெப்ப நாடுகளுக்கே உரிய ஒரு வண்ணப்பூச்சு உண்டு. சூரியன், மலர்களுக்கு வண்ணங்களைக் கொடுப்பது போல, தான் பிரிந்து வந்த பிறந்த மண்ணின் சோகமான நினைவுகள் பி.பெருமாளின் ஓவியங்களுக்குப் புதிய வர்ணத் தெம்பையும், உணர்ச்சி வேகத்தையும் கொடுக்கின்றன.

– இந்திரன்



## பிரிட்டனில் ஒரு கங்கை!

வளைந்து நெளிந்தோடும் நதிகளைக் கங்கா, காவிரி, நர்மதா என்ற பெண்களின் பெயரை வைத்து அழைத்து மகிழ்ந்து கொண்டிருந்த இந்திய மக்களின் உணர்வுகளுக்கு உருவம் கொடுத்திருக்கிறார், துருவ மிஸ்திரி என்ற சிற்பி. இந்திய நதிகளின் ஒட்டுமொத்த உருவகமாக மிஸ்திரியின் கற்பனையில் உருவாக்கப்பட்ட இந்த 'பிரமாண்ட பெண்' இடம்பெறப் போவது இங்கிலாந்தின் பர்மிங்ஹாமிலுள்ள விக்டோரியா சதுக்கத்தில். மிஸ்திரி, குஜராத்தில் பிறந்தவர். இதுபோன்ற பிரமாண்டமான பல படைப்புகளைக் கொடுத்து உலகப் புகழ் பெற்றவர். பதினான்கு அடி உயரத்தில் வெண்கலத்தினாலான இந்த 'நதி' பெண்ணின் கையில் சிறு உருண்டை இருக்கிறது. அதிலிருந்து வற்றாத அருவி ஒன்று எப்போதும் கொட்டிக் கொண்டிருக்கும்.

"இவ்வளவு செலவில் இப்படியொரு சிலை தேவை தானா?" என்று எரிச்சல்படுவோர் சிலரும் இருக்கிறார்கள்.

"எனது படைப்புகளின் அடிப்படையான கருத்து பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அந்த வகையில் 'நதி' பெண் நிச்சயமாகக் குறைவைக்க மாட்டாள்." பர்மிங்ஹாமில் பலரும் மிஸ்திரியின் இந்தக் கருத்தை ஆமோதிக்கிறார்கள்.

– நாயகி